# <u>கம்பம் நகராட்சி</u>

**2018–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் நாள் (27.04.2018) வெள்ளிக் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 3/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 3/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் கடித எண். 2380/2017/B3, நாள்:12.03.2018–இன்படி இந்நகராட்சியின் சிக்கன மின்விளக்குகள் பொருத்துவதற்கான விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்தமைக்கு இந்நகராட்சி பங்களிப்பு தொகையாக ரூ.4,33,306/–ஐ M/S TUV SUD South Asia Private Limited, Chennai நிறுவனத்தாருக்கு வழங்க மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர, அவசியம் கருதி மேற்கண்ட தொகையை செலுத்தியமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்: 1380/2018/இ2) |
| **4.** | சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க கம்பம் நகராட்சியில் வார்டு எண். 1 முதல் 33 வரையிலான வார்டுகளில் சேகரம் செய்யப்படும் குப்பைகளை அப்பகுதிகளிலேயே மைக்ரோ கம்போஸ்ட் சென்டர் மூன்று இடங்களில் அமைத்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்தவும், உரக்கிடங்கில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள தேவையான வாகனங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்திட திட்டப் பணிக்கு தொகை ரூ.300.00 இலட்சம் (ரூபாய் மூன்னூறு இலட்சம் மட்டும்)–ற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கிழ் நிதி விடுவிக்க கோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1334/ 2018/இ1) |

| | |
|---|---|
| 5. | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 30 ஆங்கூர்பாளையம் ரோட்டில் உள்ள புதிய நவீன எரிவாயு தகன மேடையினை இயக்குவதற்கு **(Consent to Operation)** தேனி மாவட்டம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உதவி சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களின் 23.12.2016–ஆம் தேதிய செயல்முறை கடிதம் எண். F0073TEN/RS/AEE /TNPCB/TEN/A/2016-ல் 31.03.2018 வரை அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. இந்நகர் மன்றத்தின் 28.02.2018 ஆம் தேதிய தீர்மானம் எண். 1434–ல் அனுமதி அளித்துள்ளதன் படி 01.04.2018 முதல் நான்கு ஆண்டுகளுக்கு புதிய நவீன எரிவாயு மேடையினை இயக்குவதற்கான அனுமதி காலத்தினை புதுப்பிக்க கட்டணத் தொகை ரூ.21,000/– (ரூபாய் இருபத்து ஓராயிரம் மட்டும்) தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்திற்கு செலுத்தப்பட்டது.<br>தேனி மாவட்டம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், உதவி சுற்றுச் சூழல் பொறியாளர் அவர்களின் 15.04.2018–ஆம் தேதிய மின்னஞ்சல் கடிதத்தில் அரசு ஆணை எண்.40 மற்றும் 41, நாள்.09.04.2018–ல் இணைவாணை பெறுவதற்கான கட்டணம் உயர்வு செய்யப்பட்டுள்ளதன் படி தொகை செலுத்த கோரப்பட்டுள்ளது. அரசாணைப்படி கம்பம் நகராட்சி எரிவாயு தகன மையத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளகட்டணம் ரூ.28,400/–ல் நகராட்சியால் செலுத்தப்பட்ட தொகை ரூ.21,000/– நீங்களாக கூடுதல் கட்டணம் ரூ.7400/– (ரூபாய் ஏழு ஆயிரத்து நானூறு மட்டும்)–ஐ தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு – 1)** அனுமதி அளிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கட்டணம் செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம். |
| 6. | இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு செய்ய இந்நகர் மன்றத்தின் 24.03.2015 ஆம் தேதிய தீர்மானம் எண்.803–ல் பிரேத எரியூட்டு கட்டணம் ரூ.2700/– நிர்ணயம் செய்தும் இதில் நகராட்சிக்குக்கு ரூ.600/– செலுத்துவதற்கும், கம்பம் விவேகானந்தா சேவா டிரஸ்டினை தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பாளர் விவேகானந்தா சேவா டிரஸ்டின் 24.04.2018 ஆம் தேதிய கடிதத்தில் மேற்படி டிரஸ்டின் நிறுவனத் தலைவர் திரு எம்.அருணாசலம் அவர்கள் காலமாகிவிட்டதால், நவீன எரிவாயு தகன மையத்தினை தொடர்ந்து பராமரிப்பு செய்ய இயலாது எனவும் நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>இராமநாதபுரம் ஸ்ரீ சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனம் **(NGO)** நிர்வாக இயக்குநரின் 24.04.2018 ஆம் தேதிய கடிதத்தில் மேற்படி நவீன எரிவாயு தகன மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தங்கள் நிறுவனத்தினால் மேற்கொள்ளவும், நகராட்சிக்கு ரூ.700/– பிரேத எரியூட்டு கட்டணம் செலுத்த விருப்பம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர். |

மேற்காணும் விபரப்படி நகராட்சி நவீன எரியூட்டு மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு கம்பம் விவேகானந்தா சேவா டிரஸ்டின் அனுமதியினை ரத்து செய்து அரசு ஆணை வழிகாட்டு நெறிமுறைகளின் படியும் நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு நகராட்சி நவீன எரியூட்டு மையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை இராமநாதபுரம் ஸ்ரீ சக்தி பவுண்டேசன் தொண்டு நிறுவனத்திடம் ஒப்படைப்பு செய்யவும், மேற்படி நிறுவனத்தினரிடமிருந்து நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரேத எரியூட்டு கட்டணம் (ஒன்றுக்கு) ரூ.2700/–ல் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.700/–ஆக நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.382/2018/இ1)

**7.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1471, நாள்.28.03.2018 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 20.04.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடு ரூ.** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்.** | **கூடுதல் %** | **குறைவு %** |
|---|---|---|---|---|---|
| 1 | கம்பம் நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் மற்றும் வார்டு எண்.17–ல் சேனை ஓடை கழிப்பிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சீர்செய்து மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 4,00,000/– | கே.சி.போஸ் | – | 0.10 |
| | | | வி.கிருஷ்ணன் | 24.90 | – |

**அலுவலகக் குறிப்பு : – 1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு கே.சி.போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.10 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1155–8/2017/இ1)

**8.** இந்நகராட்சி அலுவலக பணிக்கு 2018–2019 ஆம் ஆண்டிற்கு தேவையான எழுது பொருட்கள், பணமதிப்பு மற்றும் பண மதிப்பில்லாத படிவங்கள் மற்றும் இதர பதிவேடுகள் வாங்குவதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு – 1)** அனுமதி அளிக்கலாம்.

**2)** அரசு அங்கீகாரம் பெற்ற திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்டிகோ நிறுவனத்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

9. இந்நகர்மன்றத் தீர்மான எண்.1452, நாள்.23.03.2018—இன்படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4524 டம்பர் பிளேசர் லாரிக்கு மராமத்து பணிகள் செய்து தகுதிச்சான்று பெறுவதற்கு 10.04.2018—ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம்<br>ரூ. |
|---|---|---|
| 1. | திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம்.<br>கம்பம். | 1,09,500/— |
| 2. | திரு S.முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ்,<br>கம்பம். | 1,19,000/— |

**அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.791/2018/எச்1)

10. இந்நகர்மன்ற தீர்மான எண்.1453 நாள்.23.03.2018—இன்படி, இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 60 T 4524 டம்பர் பிளேசகர் லாரிக்கு MRF 7x50/16 சைஸ் ஆறு புதிய டயர்களில் பட்டன் டயர் நான்கும், ரன்னிங் டயர் இரண்டும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்துவதற்கு 10.04.2018—ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | டயர் ஒன்றின்<br>விலை(வரிகள் உள்பட)<br>ரூ. |
|---|---|---|
| 1. | பெரியார் பேட்டரி சென்டர்,<br>444—A2,குமுளி ரோடு,<br>குலாளர் மண்டபம் எதிரில்,<br>கம்பம். | 15.000/-<br>(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) |
| 2 | விநாயகா பேட்டரிஸ்,<br>431ஏ,எல்.எப்.ரோடு,<br>யுவராஜா தியேட்டர் எதிரில்,<br>கம்பம். | 15,500/-<br>(ரூபாய் பதினைந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்) |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பெரியார் பேட்டரி சென்டர், கம்பம் ப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.790/2018/எச்1) |
| **11.** | இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 X 0500 –க்கு 100 ஆமஸ் 12 வோல்டேஜ் உள்ள புதிய பேட்டரி வாங்குவதற்கு 12.04.2018ம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | பேட்டரி ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|
| 1 | பெரியார் பேட்டரி சென்டர்,<br>444–A2,குமுளி ரோடு,<br>குலாளர் மண்டபம் எதிரில்,<br>கம்பம். | 9,850 |
| 2. | விநாயகா பேட்டரிஸ்,<br>யுவராஜா தியேட்டர் எதிரில்,<br>கம்பம். | 10,100 |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பெரியார் பேட்டரி சென்டர், கம்பத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1277/2018/எச்1) |

| | |
|---|---|
| **12.** | இந்நகர்மன்ற தீர்மான எண்.**1459** நாள்.**28.03.2018**–இன்படி, இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 60 X 0500 டம்பர் பிளேசகர் லாரிக்கு 8/25/16 சைஸ் அப்பலோ (Appolo) கம்பெனி பட்டன் டயர்கள் நான்கு புதியதும், ரன்னிங் டயர் இரண்டும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்தி தருவதற்கு **13.**04.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | டயர் ஒன்றின் விலை(வரிகள் உள்பட) ரூ. |
|---|---|---|
| 1. | பெரியார் பேட்டரி சென்டர்,<br>444–A2,குமுளி ரோடு,<br>குலாளர் மண்டபம் எதிரில்,<br>கம்பம். | 15.000/-<br>(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) |
| 2 | விநாயகா பேட்டரிஸ்,<br>431ஏ,எல்.எப்.ரோடு,<br>யுவராஜா தியேட்டர் எதிரில்,<br>கம்பம். | 15,600/-<br>(ரூபாய் பதினைந்தாயிரத்து அறநூறு மட்டும்) |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பெரியார் பேட்டரி சென்டர், கம்பம் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.1278/2018/எச்1)** |

**13.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு **01.04.2018** முதல் **31.03.2019** வரையிலான ஓராண்டு காலத்திற்குரிய சாலைவரி மற்றும் ஆன்லைன் கட்டணம் செலுத்த ஆகும் செலவினம் ரூ.**30308/–**(ரூபாய் முப்பதாயிரத்து முந்நூாற்றி எட்டு மட்டும்)–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வாகனங்கள் விபரம் | தொகை ரூ. | பசுமை வரி ரூ. |
|---|---|---|---|
| 1 | TN.60.T 4504 | 4557 | –– |
| 2 | TN.60.T 4507 | 4557 | –– |
| 3 | TN.60.T 4524 | 4557 | –– |
| 4 | TN.60.Z 3591 | 3856 | 500 |
| 5 | TN.60.X 0500 | 3856 | 500 |
| 6 | TN.60.Y 1959 | 3042 | –– |
| 7 | TN 60 W 0778 | 3858 | 500 |
| | **சாலைவரி** | **28283** | **1500** |
| | பசுமை வரி | 1500 | |
| | Online Charge | **525** | |
| | **மொத்தம்** | **30308** | |

**அலுவலகக் குறிப்பு: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்: 1339/2018/எச்1 )

| | |
|---|---|
| **14.** | கம்பம் நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகள் எடை நிறுத்தலின்றி உரக்கிடங்கில் சேர்க்கப்படுவதால், தினசரி உருவாகும் கழிவுகளின் அளவும், தனிமனிதன் உருவாக்கும் திடக்கழிவுகளின் அளவும் சரியான அளவில் தெரிவிக்க இயலாத நிலை உள்ளது. ஆகவே ஒருவார காலத்திற்கு உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லும் அனைத்து திடக்கழிவுகளையும் எடை நிறுத்தல் செய்து தோராயமாக தினசரி உருவாகும் கழிவுகளின் அளவையும் தனிமனிதன் (Percapita) உருவாகும் கழிவுகளின் அளவையும் உறுதி செய்வதற்கும், எடை நிறுத்தல் பணி மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.15,000/—க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று எடை நிறுத்தல் பணி மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 3136/2017/எச்1) |
| **15.** | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி, கம்பம் நகராட்சி பகுதியில் குடியிருப்பு பகுதி, வணிக நிறுவனப் பகுதி மற்றும் உரக்கிடங்கு ஆகியவற்றில் குப்பை மாதிரிகளை எடுத்து Green Link Analytical and Research Laboratory India Private Limited, Coimbatore நிறுவனம் மூலம் குப்பை கழிவுகளை மாதிரி ( Sample ) எடுத்து பகுப்பாய்வு செய்து ஆய்வு அறிக்கை ( Lab Report) பெறுவதற்கு செலவினத் தொகை ரூ.16225/—க்கு Green link Analytical and Research Laboratory (India) Pvt.Ltd- லிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது. ஆனால் இந்நகர்மன்ற தீர்மான எண்.1451 நாள்.23.03.2018—இன்படி, பகுப்பாய்வு செய்து ஆய்வு அறிக்கை ( Lab Report) பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8000/—க்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது, மீதமுள்ள கூடுதல் செலவினத் தொகை ரூ.8,225/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்குவதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.3136/2015/எச்1) |
| **16.** | இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 T 4504-டம்பர் பிளேசர் லாரிக்கு ரேடியேட்டர் பழுதாகிவிட்டது. எனவே மேற்படி பழுதினை சரிசெய்வதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ. **5,000**/-ஐ (ரூபாய் ஐயாயிரம் மட்டும்) மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு: 1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். **1589/2018/எச்1)** |

**17.** இந்நகராட்சியில் அரசு மருத்துவமனை அருகில் செயல்பட்டு வரும் அம்மா உணவத்தில் உணவு விநியோகத்திற்காக ரசீதுகள் அச்சடித்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. ரசீதுகள் அச்சடித்து பயன்படுத்தப்படும் நேர்வில் அதிகபடியான செலவினம் ஏற்படுகிறது. ரசீதுகள் அச்சடிப்பதற்கான செலவினத்தினை குறைத்திடும் வகையில் கணணி வழி ரசீது வழங்கும் இயந்திரம் (Hand Held Machine) கொள்முதல் செய்யும் பொருட்டு உத்தேச செலவினம் ரூ.13000/– (ரூபாய் பதிமூன்று ஆயிரம் மட்டும்)க்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரார் பெயர் மற்றும் முகவரி | கணணி வழி ரசீது வழங்கும் இயந்திரம் (Hand Held Machine) விலை ரூ. |
|---|---|---|
| 1 | Bagawan Associates, Simmakkal, Madurai | 14,500/–<br>(ரூபாய் பதிநான்கு ஆயிரத்து ஐநூறு மட்டும்) |
| 2 | Unique Code Technologies, Madurai | 13,500/–<br>(ரூபாய் பதிமூன்று ஆயிரத்து ஐநூறு மட்டும்) |
| 3 | V-Can Perpherals, No.2, North Kambar Street, Pudur New Colony, Madurai-10 | 12,500/–<br>(ரூபாய் பதிமூன்று ஆயிரத்து ஐநூறு மட்டும்) |

**அலுவலகக் குறிப்பு:** 1) உத்தேச செலவினத்திற்கும் மற்றும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள V-Can Perpherals, No.2, North Kambar Street, Pudur New Colony, Madurai-10 என்பவரது விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கணணி வழி ரசீது வழங்கும் இயந்திரம் கொள்முதல் செய்ததனையும், பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**18.** இந்நகராட்சி அம்மா உணவகத்தில் உணவு தயாரிக்க பயன்படும் கொதிகலனிலிருந்து வெளியேறும் நீராவிக் குழாய்கள் மற்றும் வாழ்வுகள் பழுதாகி, நீராவி கசிவினால் உணவு தயாரிக்க காலதாமதமும், எரிவாயு விரயம் ஏற்படுகிறது. மேலும், உணவகத்தில் உள்ள குளிர்சாதனப் பெட்டி அரிசி கழுவும் மோட்டார் பழுதாகி இயங்காத நிலையில் உள்ளது. மேற்படி பழுதுகளை சரி செய்து நீராவி குழாய்கள் மற்றும் வால்வுகள் புதிதாக பொருத்திடவும், இப்பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.60,000/– (ரூபாய் அறுபது ஆயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.381/2018/இ1)

**ஒப்பம்/– ந. சங்கரன்**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள்.27.04.2018**
**இடம். கம்பம்**